


admin@dhinakani.com

RNI-TNTAM/2023/88253

# நமது தினகனி

NAMADHU DHINA KANI

www.dhinakani.com

காலை நாளிதழ்




| Vol: 03 | Issue: 182 | 4 Pages | 30.01.2026 | Friday | Price Rs. 6 | Annual Subscription Rs: 1825 |
|---|---|---|---|---|---|---|
| மலர்: 03 | இதழ்: 182 | 4 பக்கங்கள் | 30.01.2026 | வெள்ளிக்கிழமை | விலை ரூ.6 | வருட சந்தா ரூ.1825 |



**வாரி பெருக்கி வளம்படுத் துற்றவை**
**ஆராய்வான் செய்க வினை**

**விளக்கம்:**
**பொருள் வரும் வழிகளைப் பெருக்கச் செய்து, அவற்றால் வளத்தை உண்டாக்கி, வரும் இடையூறுகளைஆராய்ந்து நீக்க வல்லவனே செயல் செய்ய வேண்டும்.**

## பிரான்சில் சிறுவர்கள் சமூக வலைதளங்களை பயன்படுத்த தடை: நாடாளுமன்றத்தில் மசோதா தாக்கல்

பாரீஸ், ஜன.30

உலக அளவில் சிறுவர்கள் ஸ்மார்ட் போன்களிலும், சமூக வலைதளங்களிலும் அதிக நேரத்தை செலவிடுகின்றனர். இதனால் அவர்கள் மன ரீதியாகவும், உடல் ரீதியாகவும் பாதிக்கப்படுகின்றனர். இதற்காக பிரான்ஸ் அதிபர் இம்மானுவேல் மேக்ரான் தலைமையிலான அரசு ஒரு புதிய சட்டத்தைக் கொண்டு வந்துள்ளது.

இச்சட்டத்தின் படி 15 வயதுக்குட்பட்ட சிறுவர்கள் இனி பேஸ்புக், இன்ஸ்டாகிராம், டிக்டாக் போன்ற சமூக வலைதளங்களை பயன்படுத்த தடை விதிக்கப்படுகிறது. தற்போது இந்த சட்டமானது, செனட் சபை ஒப்புதலுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. அங்கு இந்த மசோதாவுக்கு ஆதரவு தெரிவிக்கும் பட்சத்தில் வருகிற செப்டம்பர் 1ந் தேதி முதல் இது அமலுக்கு வரும்.

இது தவிர, உயர்நிலைப்பள்ளிகளிலும் மொபைல் போன் பயன்படுத்த முழுமையாக தடை விதிக்க இந்த மசோதா வழிவகை செய்கிறது. ஆஸ்திரேலியாவிற்கு அடுத்தபடியாக இத்தகைய கடுமையான சட்டத்தைக் கொண்டு வரும் 2வது நாடாக பிரான்ஸ் உருவெடுத்துள்ளது.

## இங்கிலாந்தை உலுக்கும் 'சந்திரா' புயல்.. 10 ஆயிரம் வீடுகள் இருளில் மூழ்கின

லண்டன், ஜன.30

இங்கிலாந்தில் ஜனவரி மாத தொடக்கத்தில் இருந்தே அடுத்தடுத்து புயல்கள் தாக்கி வருகின்றன. 'கோரெட்டி' மற்றும் 'இங்க்ரிட்' ஆகிய இரண்டு பெரிய புயல்கள் ஏற்கனவே பெரும் பாதிப்பை ஏற்படுத்தி இருந்தன. இந்நிலையில், புதிதாக ஒரு புயல் உருவாகியுள்ளது.

இந்த புயலுக்கு இங்கிலாந்து வானிலை ஆராய்ச்சியாளர்கள் 'சந்திரா' என பெயர் வைத்துள்ளனர். மணிக்கு 130 கிலோமீட்டர் வேகத்தில் பலத்த காற்றுடன் பெய்த கனமழையால் பல மரங்கள் வேரோடு சாய்ந்து விழுந்தன.

மேலும்,பலபகுதிகளில்வெள்ளஅபாயஎச்சரிக்கைவிடுக்கப்பட்டுள்ளது. 10,000க்கும் மேற்பட்ட வீடுகளில் மின்சாரம் துண்டிக்கப்பட்டுள்ளதுடன், 300க்கும் மேற்பட்ட பள்ளிகளுக்கு விடுமுறை அளிக்கப்பட்டுள்ளது.

வெள்ளத்தில் சிக்கியவர்களை ரப்பர் படகுகள் மூலமாக மீட்கும் பணியில் அந்த நாட்டின் பேரிடர் மீட்புத்துறையினர் ஈடுபடுகிறார்கள். அதிர்ஷ்டவசமாக உயிர் சேதம் ஏதும் ஏற்படவில்லை. எனினும் விமானம் மற்றும் ரெயில் போக்குவரத்து கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ளதால் மக்கள் வீட்டிலேயே இருக்குமாறு அரசு அறிவுறுத்தியுள்ளது.

## இங்கிலாந்து பிரதமர் கெய்ர் ஸ்டார்மர் சீனா சென்றார்



லண்டன், ஜன.30

உலக அரங்கில் அமெரிக்காவுக்கும், சீனாவுக்கும் இடையே வர்த்தகப் போர் முற்றியுள்ள நிலையில், பிற மேற்கத்திய நாடுகள் தங்கள் பொருளாதாரத்தை வலுப்படுத்த சீனாவுடன் கைகோர்க்க தொடங்கியுள்ளன.

கடந்த சில ஆண்டுகளாக சீனாவுடன் விரிசல் ஏற்பட்டிருந்த நிலையில், கனடாவின் புதிய பிரதமர் மார்க் கார்னி 4 நாட்கள் அரசு முறை பயணமாக சீனாவிற்கு சுற்றுப்பயணம் மேற்கொண்டார். 2017க்கு பிறகு சீனாவிற்கு சென்ற முதல் கனடா பிரதமர் இவராவார்.

கனடாவை தொடர்ந்து, இப்போது இங்கிலாந்து பிரதமர் கெய்ர் ஸ்டார்மர் சீனாவிற்கு பயணம் மேற்கொண்டுள்ளார். தலைநகர் பீஜிங் சென்ற அவரை அந்நாட்டின் நிதி மந்திரி லான்போன் பூங்கொத்து கொடுத்து வரவேற்றார். 8 ஆண்டுகளுக்கு பிறகு இங்கிலாந்து பிரதமர் ஒருவர் சீனாவிற்கு செல்வது இதுவே முதல் முறையாகும்.

60க்கும் மேற்பட்ட தொழிலதிபர்களுடன் சீனா சென்றுள்ள பிரதமர் ஸ்டார்மர், சீன அதிபர் ஜின்பிங்கை சந்தித்துப் பேச்சுவார்த்தை நடத்த இருக்கிறார். வர்த்தகம், பொருளாதாரம் மற்றும் பாதுகாப்பு குறித்து இந்த பயணத்தில்முக்கியஒப்பந்தங்கள்கையெழுத்தாகலாம்எனஎதிர்பார்க்கப்படுகிறது.

## இந்தூரில் அசுத்த நீரால் பலி 30 ஆக உயர்வு; உள்ளூர் மக்கள் குற்றச்சாட்டு



இந்தூர், ஜன.30

மத்தியபிரதேச மாநிலம் இந்தூர் நகரம் இந்தியாவின்தூய்மையான நகராக தொடர்ந்து 7 ஆண்டுகளாக தேர்வாகி உள்ளது. இந்த நகரில் மவு, பகீரத்புரா பகுதிகளில் ஒரு பொது கழிப்பறைக்கு அடியில் சென்ற குடிநீர் குழாயில் கசிவு காரணமாக வீடுகளுக்கு வினியோகிக்கப்பட்ட மாசுபட்ட நீரால் தினமும் உயிரிழப்பு ஏற்பட்டு வருகிறது.

ஆயிரக்கணக்கானோர் உடல்நிலை பாதிக்கப்பட்டு சிகிச்சை பெற்றனர். இந்த அசுத்தமான குடிநீர் காரணமாக இதுவரை 28 பேர் உயிரிழந்ததாக உள்ளூர் மக்கள் குற்றம்சாட்டினர்.

இந்த சூழலில் கடந்த வாரம் மீண்டும் அதே பகுதியில் கழிவுநீர் கலந்த அசுத்தமான குடிநீர் விநியோகிக்கப்பட்டதால் 22 பேர் பாதிக்கப்பட்டனர். இந்நிலையில் பகீரத்புரா பகுதியில் 62 வயது முதியவர் ஒருவர் உயிரிழந்ததை தொடர்ந்து பலி எண்ணிக்கை 30 ஆக உயர்ந்து விட்டதாக உள்ளூர் வாசிகள் தெரிவித்தனர்.

மாசுபட்ட தண்ணீர் பிரச்சினை குறித்து விசாரணை நடத்த ஐகோர்ட்டு முன்னாள் நீதிபதி தலைமையில் ஆணையத்தை மத்தியபிரதேச அரசு அமைத்துள்ளது குறிப்பிடத்தக்கது.

# ஜவுளி நிறுவனங்களுக்கு 20 சதவீதம் மானியம்: முதல்அமைச்சர் அறிவிப்பு

கோவை, ஜன.30

கோவை கொடிசியா வளாகத்தில் நடைபெற்ற "ஜவுளி தொழில் மாநாடு 360"ஐ முதல்அமைச்சர் மு.க.ஸ்டாலின் காணொலி காட்சி வாயிலாக இன்று தொடங்கி வைத்தார். அதன்பின்னர் அவர் பேசியதாவது:

ரூ.915 கோடி மதிப்பீட்டில் 55 புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் இம்மாநாட்டில் மேற்கொள்ளப்பட உள்ளன. அதுமட்டுமல்லாமல், தமிழ்நாட்டின் 'ஒருங்கிணைந்த புதிய ஜவுளிக் கொள்கை 2024' இன்று வெளியிடப்பட்டுள்ளது.

தமிழ்நாடு ஜவுளித் துறையின் வலுவான கட்டமைப்பைப் பற்றி உலக வாடிக்கையாளர்களிடம்



கொண்டு போய் சேர்க்க வேண்டும்; அதன் மூலம் முதலீடுகளை ஈர்க்க வேண்டும். இதுவே இந்த மாநாட்டின் முக்கிய நோக்கமாக இருக்க வேண்டும். இந்தியாவின் இரண்டாவது பெரிய பொருளாதார மாநிலமாகத் தமிழ்நாடு திகழ்கிறது.

நாட்டின் ஜவுளித் துறையில் தமிழ்நாட்டின் பங்களிப்பு 33 விழுக்காடாக உள்ளது. ஆயத்த ஆடைத் தொழிலில் இந்தியாவின் மிகப்பெரிய ஏற்றுமதி மாநிலம் தமிழ்நாடுதான். ஜவுளி நிறுவனங்கள் அதிநவீன இயந்திரங்களை வாங்க 20% மூலதன மானியம் வழங்கப்படும். இதற்காக ஆண்டுதோறும் ரூ. 30 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்படும்.

இவ்வாறு அவர் கூறினார்.

## திருப்பூர் மாவட்டம் மூலனூர் ஒழுங்குமுறை விற்பனைக் கூடம்

திருப்பூர் மாவட்டம் மூலனூர் ஒழுங்குமுறை விற்பனைக் கூடத்தில் 29.01.2026வியாழக்கிழமை அன்று மின்னணு வேளாண் சந்தை (eNAM) திட்டத்தின் கீழ் பருத்தி விற்பனை நடைபெற்றது. இதில் திருப்பூர் கரூர் திருச்சி திண்டுக்கல் ஈரோடு,கோவை மாவட்டங்களை சேர்ந்த விவசாயிகள் 51 நபர்கள் பருத்தி கொண்டு வந்திருந்தனர். பருத்தியினை கொள்முதல் செய்ய திருப்பூர், திண்டுக்கல் ஈரோடு,சேலம் கோவை மாவட்டங்களை சேர்ந்த வணிகர்கள் மறைமுக ஏலத்தில் பங்கேற்றனர். வணிகர்களால் அதிகபட்ச விலையாக குவிண்டால் ஒன்றிற்கு ரூபாய்.8311 ற்கும் குறைந்தபட்சவிலை ரூபாய்.6500 ற்கும் சராசரி விலை ரூ 7250 ற்கும் விற்பனையானது. பருத்தியின் மொத்த அளவு 616மூட்டைகள் , குவிண்டால் 220.34 மதிப்பு



ரூபாய்16,02,899.19/மேற்கண்டவிவரங்களை திரு. சண்முகசுந்தரம், வேளாண்மை துணை இயக்குநர்/செயலாளர், திருப்பூர் விற்பனைக்குழு தெரிவித்தார். ஏலத்திற்கான ஏற்பாடுகளை கண்காணிப்பாளர் மாரியப்பன் செய்திருந்தார்.

## திருவாரூர்: பெண்ணிடம் 25 பவுன் நகைகள் வழிப்பறி

திருவாரூர், ஜன.30

திருவாரூர் மாவட்டம் குடவாசல் அருகே உள்ள எரவாஞ்சேரி புதுமனை தெருவை சேர்ந்தவர் ரிலுவானுதீன். இவருடைய மனைவி ஹமீதா பைரோஸ்(வயது 30). இவர் தனக்கு சொந்தமான ஆரம், நெக்லஸ், வளையல், சங்கிலி உள்பட 25 பவுன் நகைகளை எரவாஞ்சேரியில் உள்ள ஒரு வங்கியின்லாக்கரில்வைப்பதற்காககொண்டு சென்றார்.

அப்போது வங்கியில் கூட்டம் அதிகமாக இருந்ததால் மறுநாள் லாக்கரில் வைத்துக்கொள்ளலாம் என கூறி உள்ளனர். இதனையடுத்து ஹமீதா பைரோஸ் தங்க நகைகளுடன் தனது ஸ்கூட்டரில் மீண்டும்



வீட்டுக்கு வந்து கொண்டிருந்தார். எரவாஞ்சேரி கிழக்கு அக்ரஹாரம் பிள்ளையார் கோவில் அருகே வந்தபோது மோட்டார் சைக்கிளில் வந்தமர்மநபர்அவரிடம்இருந்தநகைகளை பறித்துக்கொண்டு அங்கிருந்து தப்பிச்சென்று விட்டார்.

இதுகுறித்து எரவாஞ்சேரி போலீஸ் நிலையத்தில் ஹமீதா பைரோஸ் புகார் கொடுத்தார்.அதன்பேரில்பேரளம்போலீஸ் இன்ஸ்பெக்டர் கோகுலகண்ணன், எரவாஞ்சேரி போலீஸ் சப்இன்ஸ்பெக்டர் சாமுவேல்மற்றும்போலீசார்வழக்குப்பதிவு செய்து அந்த பகுதியில் உள்ள கண்காணிப்பு கேமராக்களில் பதிவாகி உள்ள காட்சிகளை அடிப்படையாக கொண்டு நகைகளை பறித்துச்சென்ற மர்ம நபரை வலைவீசி தேடி வருகிறார்கள்.

## திருவாரூர்: பெண்ணிடம் 2 உலமாக்களின் ஓய்வூதிய உயர்வு உள்ளிட்ட முதல்அமைச்சரின் அறிவிப்புகள் வரவேற்கத்தக்கவை! எஸ்டிபிஐ 5 பவுன் நகைகள் வழிப்பறி

சென்னை, ஜன.30

இதுதொடர்பாக எஸ்டிபிஐ கட்சியின்மாநிலத்தலைவர்நெல்லை முபாரக் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது:

வக்பு வாரியத்தில் பதிவு செய்யப்பட்ட உலமாக்களுக்கான ஓய்வூதியம்ரூ.3,000லிருந்துரூ.5,000 ஆகவும், குடும்ப ஓய்வூதியம் ரூ.1,500லிருந்து ரூ.2,500ஆகவும் உயர்த்தப்படுவது, இருசக்கர வாகன மானிய உயர்வு, கோயம்புத்தூரில் புதிய வக்பு தீர்ப்பாயம் அமைப்பது, கபர்ஸ்தானவசதிஇல்லாதபகுதிகளில் அரசு நிலம் ஒதுக்கீடு, உருது ஆசிரியர் காலிப்பணியிடங்கள் நிரப்புதல் ஆகியவைதமிழகமுதல்அமைச்சரால் அறிவிக்கப்பட்டுள்ளன. இவை அனைத்தும் வரவேற்புக்குரியவை.

கர்நாடக அரசு போன்று உலமாக்களுக்கான நலத்திட்டங்களை தமிழக அரசும் முழுமையாக செயல்படுத்த



வேண்டும் என எஸ்டிபிஐ தொடர்ந்து வலியுறுத்தி வருகிறது. மேலும், தமிழ்நாடு முழுவதும் மண்டல அளவில் வக்பு தீர்ப்பாயங்களை அமைத்திட வேண்டும், அடக்க ஸ்தலங்களுக்கான இடங்களை அரசு உடனடியாக ஒதுக்கித் தர வேண்டும், உருது ஆசிரியர் பணியிடங்களை விரைவில் நிரப்ப வேண்டும் என்பன போன்ற நீண்டகால கோரிக்கைகளை எஸ்டிபிஐ கட்சி தொடர்ந்து முன்வைத்து வருகிறது.

இந்நிலையில், முதல் அமைச்சரின் இந்த அறிவிப்புகள் மிகுந்த மகிழ்ச்சியையும் நம்பிக்கையையும் அளிக்கின்றன. இதற்காக தமிழக முதல்அமைச்சர் மு.க. ஸ்டாலினுக்கு எஸ்டிபிஐ கட்சி சார்பில் மனமார்ந்த நன்றியை தெரிவித்துக் கொள்கிறோம்.

அதேவேளை, முஸ்லிம் சமூகத்தின் நீண்டகால கோரிக்கைகளான சிறை வாசிகள் விடுதலை, இடஒதுக்கீடு உயர்வு, பொருளாதார மேம்பாடு மற்றும் வாழ்வாதார முன்னேற்றம் தொடர்பான பிற முக்கிய கோரிக்கைகளையும் விரைவில் நிறைவேற்றநடவடிக்கைஎடுக்கவேண்டும் என கேட்டுக்கொள்கிறேன்.

இவ்வாறு அவர் அந்த அறிக்கையில் தெரிவித்துள்ளார்.



# ஆசிரியர் தகுதித் தேர்வுக்கான தேர்ச்சி மதிப்பெண் குறைப்பு: அரசாணை வெளியீடு




சென்னை, ஜன.30

அரசு மற்றும் அரசு உதவி பெறும் தனியார் பள்ளிகளில் ஆசிரியர்களாக பணியாற்ற ஆசிரியர் தகுதித் தேர்வில் தேர்ச்சி பெற்று இருக்க வேண்டும். இந்த தேர்வை ஆசிரியர் தேர்வு வாரியம் (டி.ஆர்.பி.) ஒவ்வொரு ஆண்டும் நடத்துகிறது. ஆசிரியர் தகுதித்தேர்வில் தேர்ச்சி பெறாமல் பணியில் இருக்கும் ஆசிரியர்களும் தகுதித் தேர்வில் தேர்ச்சி பெற வேண்டும் என சுப்ரீம் கோர்ட்டு சமீபத்தில் உத்தரவிட்டது.

இந்த உத்தரவால் அரசு, அரசு உதவி பெறும் பள்ளிகளில் பணியாற்றும் சுமார் 1 லட்சத்து 76 ஆயிரம் ஆசிரியர்கள் தகுதித் தேர்வை எழுதவேண்டியநிலைக்கு தள்ளப்பட்டனர். இந்தநிலையில், இவர்களுக்கு, நடப்பாண்டில் 3 முறை சிறப்பு தகுதித் தேர்வை நடத்த இருப்பதாக பள்ளிக்கல்வித்துறை அறிவிப்பு வெளியிட்டது.

பிற மாநிலங்கள் ஆசிரியர் தகுதித்தேர்வுக்கு தேர்ச்சி மதிப்பெண்ணை குறைத்து இருப்பது போல, தமிழகத்திலும் தேர்ச்சி மதிப்பெண்ணை குறைக்க வேண்டும் என ஆசிரியர்கள் கோரிக்கை வைத்தனர்.

இந்த கோரிக்கையை ஏற்று ஆசிரியர் தகுதித் தேர்வுக்கான தேர்ச்சி மதிப்பெண்ணை குறைத்து தமிழக அரசு அரசாணை வெளியிட்டுள்ளது. இதனை பள்ளிக்கல்வித்துறை அமைச்சர் அன்பில் மகேஷ் பொய்யாமொழி தன்னுடைய எக்ஸ் பக்கத்தில் பகிர்ந்துள்ளார்.

அந்த அரசாணையில் கூறியிருப்பதாவது:

150 மதிப்பெண்ணுக்கு நடத்தப்படும் ஆசிரியர் தகுதித்தேர்வில் தாள்1 மற்றும் தாள்2 தேர்வுகளில் பொதுப்பிரிவினருக்கு 60 சதவீதம் (90 மதிப்பெண்), இதர பிரிவினருக்கு 55 சதவீதம் (82.5 மதிப்பெண்) தேர்ச்சி மதிப்பெண்ணாக இருந்தது. தற்போது இந்த தேர்ச்சி மதிப்பெண் பொதுப்பிரிவினர் தவிர மற்றவர்களுக்கு குறைக்கப்பட்டுள்ளது. பொதுப்பிரிவினரை பொறுத்தமட்டில் ஏற்கனவே இருப்பது போன்று 60 சதவீத மதிப்பெண் பெற வேண்டும்.

பிற்படுத்தப்பட்டோர் (பி.சி.), பிற்படுத்தப்பட்டோர் (முஸ்லிம்), மிகவும் பிறபடுத்தப்பட்டோர், சீர்மரபினர், மாற்றுத்திறனாளி பிரிவினருக்கு 55 சதவீதத்தில் இருந்து 50 சதவீதமாகவும் (75 மதிப்பெண்), எஸ்.சி., எஸ்.சி. (அருந்ததியர்), எஸ்.டி. பிரிவினருக்கு 55 சதவீதத்தில் இருந்து 40 சதவீதமாகவும் (60 மதிப்பெண்) தேர்ச்சி மதிப்பெண் குறைக்கப்படுகிறது.

11.8.2025 அன்று ஆசிரியர் தேர்வு வாரியம் வெளியிட்ட அறிவிப்பின்படி நடத்தப்பட்ட ஆசிரியர் தகுதித் தேர்வுகளுக்கு தற்போது நிர்ணயிக்கப்பட்டுள்ள குறைந்தபட்ச தகுதி மதிப்பெண்களைப் பின்பற்றுவதற்கு ஆசிரியர் தேர்வு வாரியத்திற்கு அனுமதி வழங்கப்படுகிறது. இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த தேர்வுக்கும் பொருந்தும்

கடந்த ஆண்டு (2025) ஆகஸ்டு மாதம் வெளியிடப்பட்ட ஆசிரியர்தகுதித் தாள் தேர்வை 4.24 லட்சம் பேர் எழுதி உள்ளனர்.

அவர்களுக்கான தேர்வு முடிவு இன்னும் வெளியிடப்படவில்லை. இந்த அரசாணை மூலம் அவர்களுக்கும் தகுதித் தேர்வுக்கான தேர்ச்சி மதிப்பெண் குறைந்துள்ளது குறிப்பிடத்தக்கது.

# கடலூர்: பெண்ணின் முகத்தை துணியால் மூடி 6 சவரன் நகை பறிப்பு

கடலூர் மாவட்டம் ராமநத்தம் அருகே உள்ள வாகையூர் கிராமத்தை சேர்ந்தவர் பூங்கோதை (வயது 51). இவர் நேற்று காலை அதே பகுதியில் உள்ள தனது மக்காச்சோள வயலுக்கு சென்றார்.

அவரை பின்தொடர்ந்து வந்த மர்ம நபர் ஒருவர், திடீரென பூங்கோதையின் முகத்தில் துணியை போட்டு இறுக்கமாக பிடித்துக் கொண்டார்.

பின்னர் அவர் கழுத்தில் அணிந்திருந்த 6 சவரன் நகையை பறித்து விட்டு அங்கிருந்து தப்பி ஓடிவிட்டார். பறிபோன நகையின் மதிப்பு ரூ.6 லட்சம் இருக்கும் என கூறப்படுகிறது. இதுகுறித்து போலீசார் விசாரணை நடத்தி வருகின்றனர்.

# பாஜக ஆட்சிக்கு வந்தபின் உயர்கல்வி நிறுவனங்களில் மாணவர்கள் தற்கொலை அதிகரிப்பு: மு.க.ஸ்டாலின் குற்றச்சாட்டு

சென்னை, ஜன.30

முதல் அமைச்சர் மு.க.ஸ்டாலின் வெளியிட்டுள்ள எக்ஸ் தளப்பதிவில் கூறப்பட்டிருப்பதாவது:

யு.ஜி.சி. (உயர்கல்வி நிறுவனங்களில் சமத்துவ ஊக்குவிப்பு) விதிகள், 2026 தாமதமான நடவடிக்கை என்றாலும், பாகுபாட்டிலும், நிறுவனங்களின் அக்கறையின்மையிலும் தோய்ந்து போனஉயர்கல்விஅமைப்பினைச் சீர்ப்படுத்துவதை நோக்கிய வரவேற்கத்தக்க நகர்வாகும்.

மத்திய அளவில் பா.ஜ.க. ஆட்சிக்கு வந்ததில் இருந்து, இந்திய உயர்கல்வி நிறுவனங்களில் மாணவர் தற்கொலைகள், குறிப்பாகப் பட்டியல், பழங்குடியின மாணவர்களின் தற்கொலைகள் அதிகரித்திருப்பது கண்கூடு. மேலும், தென்னிந்திய மாநிலங்கள் காஷ்மீர் சிறுபான்மைச் சமூகங்களைச் சேர்ந்த மாணவர்களைக் குறிவைத்து மீண்டும் மீண்டும் தாக்குதல் சம்பவங்களும் தொல்லைக்குள்ளாக்குவதும் நடத்தப்பட்டு வருகின்றன. இத்தகைய சூழலில், சமத்துவப் பாதுகாப்பு நடவடிக்கைகள் என்பவை தவிர்க்க முடியாத கட்டாயமாகும். அதில் இருவேறு கருத்துக்கு இடமிருக்க முடியாது.

யு.ஜி.சி.புதியவிதிகளில் சாதியப் பாகுபாட்டை ஒழிப்பதும், அச்சட்டக்கத்துக்குள் இதர பிற்படுத்தப்பட்ட வகுப்பினருக்கும் பாதுகாப்பு வழங்கப்பட்டிருப்பதும் ஆதரிக்கத்தக்கது. மண்டல் குழு பரிந்துரைகளின் அடிப்படையில் இட ஒதுக்கீட்டை அமல்படுத்தியபோது போராட்டம் நடத்தியஅதேபிற்போக்கு மனநிலையுடன்தான் யு.ஜி.சி. விதிகளுக்கு எதிரான தற்போதைய போராட்டங்களும் அமைந்துள்ளன. இத்தகைய அழுத்தங்களுக்கு ஆட்பட்டு, மத்திய அரசு இந்த புதிய விதிகளையோ அல்லது அவற்றின் மைய நோக்கங்களையோ நீர்த்துப்போகச் செய்யக் கூடாது.

ரோகித் வெமுலா அவர்களின் தற்கொலை போன்ற வழக்குகளில், துணைவேந்தர்கள் மீதே குற்றம்சாட்டப்பட்டிருந்த நிலையில், யுஜிசி புதிய விதிகளின்படி உயர்கல்வி நிறுவனத் தலைமைப் பொறுப்பில் இருப்பவரின் தலைமையிலேயே சமத்துவக் குழுக்களை அமைத்தால் அவை எப்படி சுதந்திரமாகச் செயல்பட முடியும் என்ற கேள்வி எழுகிறது. அதுவும் பல உயர்கல்வி நிறுவனங்களின் தலைமைப் பொறுப்பில் ஆர்.எஸ்.எஸ். ஆதரவாளர்கள் நியமிக்கப்பட்டிருக்கும் போதுஇக்கேள்விமேலும் வலுவடைகிறது.

மாணவர்களின் தற்கொலைகளைத் தடுப்பது, பாகுபாடுகளை முடிவுக்குக் கொண்டு வருவது, பிற்படுத்தப்பட்ட சமூகங்களைச் சேர்ந்த மாணவர்களின் இடைநிற்றலைக் குறைப்பது ஆகியவற்றில் மத்திய பா.ஜ.க. அரசு உண்மையாகவே தீவிரமாக இருந்தால், இந்த விதிகளை மேலும் வலுப்படுத்துவது மட்டுமில்லாமல், அதில் உள்ள அமைப்புரீதியான குறைகளைக் களையும் வகையில் திருத்தியமைக்க வேண்டும். முறையாக நடவடிக்கைகளை எடுக்கும் வகையில் செயல்படுத்திட வேண்டும். இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

# அ.தி.மு.க.வில் இணைய நான் ரெடி; எடப்பாடி பழனிசாமி, டி.டி.வி.தினகரன் ரெடியா? ஓ.பன்னீர்செல்வம் தடாலடி கேள்வி



பெரியகுளம், ஜன.30

சட்டசபை தேர்தலில் யாருடன் கூட்டணி என்பது தொடர்பாக, ஓ.பன்னீர்செல்வம் தனது ஆதரவாளர்களுடன் தேனி மாவட்டம் பெரியகுளம் கைலாசப்பட்டியில் ஆலோசனை நடத்தினார். கூட்டத்தில், நிர்வாகிகளின் முடிவை எழுதித் தர கூறியதால் சலசலப்பு ஏற்பட்டதாக சொல்லப்பட்டது. ஆனால், ஓ.பன்னீர்செல்வம் இதை மறுத்துள்ளார். கூட்டம் குறித்து ஓ.பன்னீர்செல்வம் நிருபர்களிடம் கூறியதாவது:

"அ.தி.மு.க. இயக்கத்தின் அடிப்படை தொண்டர்களை மீட்க சட்டப்போராட்டத்தை நீதிமன்றத்தில் நடத்திகொண்டிருக்கிறோம். நாடாளுமன்ற தேர்தலில் ராமநாதபுரம் தொகுதியில் நான் போட்டியிட காரணம், எங்கள் பக்கம் எவ்வளவு தொண்டர்கள் இருக்கிறார்கள் என்பதை காட்டத்தான்.

தேர்தலுக்கு 12 நாட்கள் தான் இருந்த நிலையில், பலாப்பழ சின்னத்தில் போட்டியிட்டேன். ஆனால், என்னை தோல்விடைய சதி செய்து ஓ.பன்னீர்செல்வம் பெயரில் 6 பேரை தேர்தலில் நிறுத்தினார்கள். அந்த சூழ்ச்சிகளை முறியடித்து அ.தி.மு.க. அடிப்படை உரிமையை மீட்க இந்த கழகம் உருவாக்கப்பட்டது. தேர்தலுக்காக தனிக்கட்சி தொடங்குவது குறித்தும், போட்டியிடுவது நாங்கள் எந்த முடிவும் எடுக்கவில்லை.

அ.தி.மு.க. யாராலும் வெல்ல முடியாத இயக்கமாக ஜெயலலிதா உருவாக்கினாரோ, அதுபோல் உருவாக்குவதுதான் எங்கள் நோக்கம். ஆனால், தேவையில்லாத குழப்பம் உருவாக்கப்படுகிறது. தேனி மாவட்டம் அ.தி.மு.க. சரித்திரத்தில் இடம் பெற்றுள்ளது. எம்.ஜி.ஆர்., ஜெயலலிதாவை முதல்அமைச்சராக உருவாக்கிய மாவட்டம். அ.தி.மு.க.வின் கோட்டை.

எனவே தான் பிரிந்து கிடக்கும் அ.தி.மு.க. இணைய வேண்டும் என்பதுதான் எங்களின் தலையாய கோரிக்கை. இந்த கூட்டத்தில் கலந்து கொண்ட நிர்வாகிகள், கட்சி நலனை கருத்தில் கொண்டு அ.தி.மு.க. ஒன்றிணைய வேண்டும் என்று கூறினார்கள்.

இன்றைக்கு அ.தி.மு.க. வெற்றி பெற வேண்டும் என்று டி.டி.வி.தினகரன், அண்ணன் எடப்பாடி பழனிசாமி சொல்கிறார்கள். எதிரும் புதிருமாக இருந்தவர்கள் இன்று இணைந்திருக்கிறார்கள். அவர்கள் நினைத்தால் எங்களையும் இணைக்கலாம். அவ்வாறு நடந்தால் தேசிய ஜனநாயக கூட்டணி மாபெரும் வெற்றியடையும்.

2வது தர்மயுத்தத்தை நான் தொடங்கவே மனோஜ்பாண்டியன், வைத்திலிங்கமும்தான் காரணம். இன்றைய கூட்டத்தில்நிர்வாகிகளைமனதின் குரலாக எழுதிக் கொடுக்க சொன்னேன். உங்களின் குரலாகத்தான் ஒலிப்போம் என்று அவர்கள் கூறிவிட்டார்கள்.

தேர்தலில் போட்டியிடுவதற்காக இந்த இயக்கம் தொடங்கவில்லை. கட்சியை ஒருங்கிணைக்கவே தொடங்கப்பட்டது.அ.தி.மு.க.வில் இணைய நான் ரெடி. டி.டி.வி.தினகரன், எடப்பாடி பழனிசாமி ரெடியா?"

இவ்வாறு அவர் கூறினார்.

# வீட்டில் பதுக்கிய ரூ.10 லட்சம் மதிப்புள்ள கடல் அட்டை, கடல் குதிரைகள் பறிமுதல்

ராமநாதபுரம் மாவட்டம் மண்டபம் பகுதியில் உள்ள ஒரு வீட்டில், கடலோர பாதுகாப்பு குழும போலீசாரும், வனத்துறையினரும் இணைந்து சோதனை செய்தனர்.

அப்போது அந்த வீட்டில் பதுக்கி வைத்திருந்த 110 கிலோ பதப்படுத்திய கடல் அட்டைகள் மற்றும் 30 கிலோ பதப்படுத்திய கடல் குதிரைகள் ஆகியவற்றை போலீசார் பறிமுதல் செய்தனர்.

இந்த கடல் அட்டை மற்றும் கடல் குதிரைகளை இலங்கைக்கு கடத்துவதற்காக பதுக்கி வைத்து இருந்ததும் விசாரணையில் தெரியவந்தது.

இந்த கடல் அட்டை மற்றும் கடல் குதிரைகளின் சர்வதேச மதிப்பு சுமார் ரூ.10 லட்சம் இருக்கும் என்று கூறப்படுகிறது. இதுகுறித்து போலீசார் விசாரித்து வருகின்றனர்.

# தந்தை, மகள் விஷம் குடித்த விவகாரம்: 3 போலீசார் பணி இடைநீக்கம்

தென்காசி, ஜன.30

தென்காசி மாவட்டம் புளியங்குடி பகுதியை சேர்ந்தவர் முகம்மது கனி (வயது 71). இவரது மகள் ஆயிஷா சித்திக்கா (41). இவர்கள் இருவரும் சட்டவிரோதமாக தடை செய்யப்பட்ட புகையிலை பொருட்களை விற்பனை செய்ததாக புகார் எழுந்தது.

இதன்பேரில் கடந்த 2 நாட்களுக்கு முன்பு அவர்கள் இருவரையும் போலீசார் பிடித்து விசாரணை நடத்துவதற்காக புளியங்குடி போலீஸ் நிலையத்துக்கு அழைத்து சென்றனர். அப்போது ஆவணம் எடுத்துவருவதாக கூறிவிட்டு புறப்பட்டு சென்ற முகம்மது கனி திடீரென விஷம் குடித்தார். பின்னர் மீண்டும் போலீஸ் நிலையத்துக்கு வந்து தனது மகள் ஆயிஷா சித்திக்காவுக்கும் விஷம் கொடுத்தார். அவர் அதை குடித்துள்ளார்.

இதனால் போலீஸ் நிலையத்தில் மயக்கமடைந்த இருவரும் மீட்கப்பட்டு புளியங்குடி சிந்தாமணியில் உள்ள ஒரு தனியார் ஆஸ்பத்திரியில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்திய இந்த சம்பவத்தில் அஜாக்கிரதையாக செயல்பட்டதாக கூறி புளியங்குடி போலீஸ் நிலையத்தில் பணியாற்றிய தனிப்பிரிவு போலீஸ்காரர் மருது பாண்டியன், பெண் போலீஸ் தேவி, ஏட்டு சிவா ஆகிய 3 பேரையும் பணி இடைநீக்கம் செய்து மாவட்ட போலீஸ் சூப்பிரண்டு ஜி.எஸ்.மாதவன் அதிரடியாக உத்தரவிட்டார்.

மேலும், சப்இன்ஸ்பெக்டர் தீபன் குமார் காத்திருப்பு பட்டியலுக்கு மாற்றப்பட்டுள்ளார். இந்த சம்பவம் தொடர்பாக புளியங்குடி போலீசார் வழக்குப்பதிவு செய்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

# தைப்பூசம் திருவிழா: நெல்லை, தூத்துக்குடிக்கு சிறப்பு ரெயில்

சென்னை, ஜன.30

தெற்கு ரெயில்வே வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் கூறப்பட்டுள்ளதாவது:

தைப்பூசம் திருவிழாவை முன்னிட்டு பயணிகளின் கூட்ட நெரிசலை தவிர்க்க சிறப்பு ரெயில்கள் இயக்கப்படுகின்றன. சென்னை எழும்பூரில் இருந்து திருநெல்வேலிக்கு வரும் 30ந் தேதி இரவு 11.45 மணிக்கு இயக்கப்படும் சிறப்பு ரெயில் (வண்டி எண்: 06001) மறுநாள் காலை 11.15 மணிக்கு திருநெல்வேலியை சென்றடையும். மறுமார்க்கத்தில், திருநெல்வேலியில் இருந்து தாம்பரத்திற்கு பிப்ரவரி 1ந் தேதி இரவு 10.35 மணிக்கு புறப்படும் சிறப்பு ரெயில் (06002) மறுநாள் காலை 9.30 மணிக்கு தாம்பரத்தை வந்தடையும்.

இதேபோல், தாம்பரத்தில் இருந்து தூத்துக்குடிக்கு வரும் 31ந் தேதி இரவு 11.50 மணிக்கு புறப்படும் சிறப்பு ரெயில் (06003) மறுநாள் காலை 11 மணிக்கு தூத்துக்குடியை சென்றடையும்.

மறுமார்க்கத்தில் தூத்துக்குடியில் இருந்து பிப்ரவரி 1ந் தேதி இரவு 11.55 மணிக்கு புறப்படும் சிறப்பு ரெயில் (06004) மறுநாள் காலை 11.30 மணிக்கு சென்னை கடற்கரை ரெயில் நிலையத்தை சென்றடையும்.

இந்த சிறப்பு ரெயில்களுக்கான முன்பதிவு இன்று (வியாழக்கிழமை) மதியம் 2.15 மணிக்கு தொடங்குகிறது. இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

# 'சொல்வதை எழுதுபவர் பணிக்கு கல்லூரி மாணவர்களை நியமிக்கலாம்' அரசுத் தேர்வுகள் இயக்ககம் அறிக்கை




சென்னை, ஜன.30

சென்னை அரசுத் தேர்வுகள்இயக்ககத்தின்இயக்குநர் க.சசிகலா, அனைத்து மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர்களுக்கு அனுப்பியுள்ள சுற்றறிக்கையில் கூறியிருப்பதாவது;

"அரசுத் தேர்வுகள் இணை இயக்குநர் (மேல்நிலை) தலைமையில் அமைக்கப்பட்ட குழுவின் பரிந்துரையின் படி, தொடக்கக் கல்வி ஆசிரியர் பட்டயச் சான்றிதழ் (Diploma in Elementary Education) / ஆசிரியர் கல்வி பட்டச் சான்று (B. Ed.,) / தொழிற் கல்வி மற்றும் கலை அறிவியல் கல்லூரிகளில் இரண்டாமாண்டு பயிலும் மாணவர்களை, விருப்பத்தின் அடிப்படையில் தன்னார்வலர்களாக, நடைபெறவிருக்கும் மார்ச்/ஏப்ரல் 2026 மேல்நிலை இரண்டாம் ஆண்டு மற்றும் பத்தாம் வகுப்பு பொதுத்தேர்விற்கு சொல்வதை எழுதுபவராக நியமிக்கலாம் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

எனவே, அனைத்து மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர்களும் வழிகாட்டுதல்களைப் பின்பற்றி சொல்வதை எழுதுபவர் பணிக்கு கல்லூரி மாணவர்களை தன்னார்வலர்களாகத் தேர்ந்தெடுக்க வேண்டுமெனத் தெரிவிக்கப்படுகிறது."

இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

# சட்டசபை தேர்தலில் மக்கள் விரோத ஆட்சியை தூக்கி எறிவோம்: தவெக



சென்னை, ஜன.30

தமிழக வெற்றிக் கழக பொதுச்செயலாளர் என். ஆனந்த் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறப்பட்டிருப்பதாவது:

தமிழக அரசியல் களத்தில் மக்களுக்கான முதன்மைச் சக்தியாகத் தமிழக வெற்றிக் கழகம் திகழ்கிறது. தவெகவை நம் வெற்றித் தலைவர் விஜய் ஆரம்பித்து,இரண்டுஆண்டுகள் வெற்றிகரமாக நிறைவடைந்துள்ளன. தற்போது மூன்றாம் ஆண்டு தொடங்குகிறது. இந்த இரண்டு ஆண்டுகளாகத் தமிழக மக்களுக்கான விஜய்யின் முன்னெடுப்புகள் மிக முக்கியமானவை.

ஆனாலும் நாம் கடந்து வந்த பாதை எவ்வளவு கடினமானது என்பதை நீங்கள் அனைவரும் அறிவீர்கள். தன் மீது பேரன்பு கொண்ட மக்களுக்காக, நம் தலைவர் விஜய் அத்தனைத் தடைகளையும் எதிர்கொண்டு இன்னும் தீவிரமாகக் களமாடி வருகிறார். நம் தமிழ்நாட்டு மக்களின் எதிர்பார்ப்புகளைப் பூர்த்தி செய்யும் இலக்கை நோக்கிய வெற்றிப் பயணத்தில் மேலும் அதிக ஈடுபாட்டுடன் தன்னை அர்ப்பணித்துக் கொண்டுள்ளார்.

தமிழக வெற்றிக் கழகம் மூன்றாம் ஆண்டில் அடியெடுத்து வைக்கும் இந்த இனிய தருணத்தைக் கொண்டாட உள்ளோம். நம் வெற்றித் தலைவர் அவர்கள் தலைமையில் 'தமிழக வெற்றிக் கழக மூன்றாம் ஆண்டுத் தொடக்க விழா சென்னையில் நடைபெற உள்ளது. இந்த நிகழ்ச்சி. நமது கழகத் தலைமை நிலையச் செயலகத்தில், வரும் 2ம் தேதி (திங்கட்கிழமை) காலை 11.00 மணிக்கு நடைபெறுகிறது. இதைக் கட்சியின்தலைவர் ஒப்புதலோடு மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

மக்களுக்காக உழைத்து, மக்களுடன் மக்களாக இணைந்து நிற்போம். வருகின்ற சட்டமன்றத் தேர்தலில் மக்கள் விரோத ஆட்சியைத் தூக்கி எறிவோம். மாபெரும் வெற்றி பெற்று. நம் வெற்றித் தலைவர் விஜய் தலைமையில் மனசாட்சி உள்ள மக்களாட்சியை அமைக்க உறுதி ஏற்போம். இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது

# மகனை மண்வெட்டியால் தாக்கி கொலை செய்த முதியவருக்கு ஆயுள் தண்டனை



சென்னை, ஜன.30

கடந்த 2024ம் ஆண்டு தூத்துக்குடி மாவட்டம் கோவில்பட்டி மேற்கு காவல் நிலைய எல்லைக்குட்பட்ட பகுதியைச் சேர்ந்த பிரியாத்தி (வயது 83) என்பவர் தனது மகனான பாலமுருகன்(38) என்பவரை மண்வெட்டியால் தாக்கி கொலை செய்தார். இதுகுறித்து கோவில்பட்டி மேற்கு காவல் நிலைய போலீசார் கொலை வழக்குப்பதிவு செய்து புலன் விசாரணை செய்து குற்றப்பத்திரிக்கையை நீதிமன்றத்தில் தாக்கல் செய்தனர்.

இந்த வழக்கின் விசாரணை தூத்துக்குடி மாவட்ட கூடுதல் அமர்வு நீதிமன்றம்IIல் நடைபெற்று வந்தது. இந்த வழக்கை விசாரித்த நீதிபதி பிரீத்தா நேற்று, பிரியாத்திஎன்பவரைகுற்றவாளி என தீர்ப்பளித்து, அவருக்கு ஆயுள் தண்டனை மற்றும் ரூ.1,000 அபராதம் விதித்து தீர்ப்பு வழங்கினார்.

இந்த வழக்கின் சாட்சிகளை நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தி குற்றவாளிக்கு தண்டனை பெற்றுத் தந்த கோவில்பட்டி உட்கோட்ட டி.எஸ்.பி. ஜெகநாதன், இந்த வழக்கினை திறம்பட புலனாய்வு செய்த கோவில்பட்டி மேற்கு காவல் நிலைய இன்ஸ்பெக்டர் நவநீத கிருஷ்ணன், கோவில்பட்டி மேற்கு காவல் நிலைய காவல்துறையினர் மற்றும் நீதிமன்றத்தில் சிறப்பாக வாதிட்ட அரசு தரப்பு வழக்கறிஞர் சேவியர் ஞானபிரகாசம் ஆகியோரை தூத்துக்குடி மாவட்ட எஸ்.பி. சிலம்பரசன் பாராட்டினார்.

தூத்துக்குடி மாவட்டத்தில் பாரதீய நியாய சன்ஹிதா சட்டத்தின் கீழ் கொலை வழக்குப்பதிவு செய்யப்பட்டு துரிதமாக விசாரணை மேற்கொண்டு கொலை வழக்கில் தண்டனை வழங்கப்பட்டது இதுவே முதன் முறை என்பது குறிப்பிடத்தக்கது.

# சர்வதேச போட்டிகளில் பங்கேற்க வீரர், வீராங்கனைகளுக்கு ரூ.7.85 லட்சம் வழங்கிய துணை முதல்அமைச்சர் உதயநிதி ஸ்டாலின்



சென்னை, ஜன.30

தமிழ்நாடு முதல்அமைச்சர் இந்தியாவின் விளையாட்டு தலைநகராக தமிழ்நாட்டினை உருவாக்கும் வகையில் பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றார். அதனடிப்படையில் விளையாட்டு வீரர்களுக்கு உதவுவதற்காக தமிழ்நாடு சாம்பியன் அறக்கட்டளையை தொடங்கி, அந்த நிதியில் இருந்து விளையாட்டு உபகரணங்கள் வாங்க நிதியுதவி வழங்கப்படுவதுடன், வெளிநாடுகளில் நடைபெறும் போட்டிகளில்பங்கேற்கவும், விளையாட்டு வீரர்கள் சர்வதேச, தேசிய அளவிலான போட்டிகளில் பங்கு பெறும் வகையில் சிறப்பு பயிற்சிகள் மேற்கொள்ளவும் நிதியுதவி வழங்கப்பட்டு வருகின்றது.

அதனடிப்படையில், தமிழ்நாடு துணை முதல் அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் இன்று, தேசிய அளவில் நடைபெற்ற போட்டிகளில் பதக்கங்கள் வென்ற தடகள வீரர்கள் ஜ.கோகுலபாண்டியன், வீ.நவீன்குமார் மற்றும் வீராங்கனைகள் ஜா.சுஜி, கா.யாமினி ஆகியோருக்கு விளையாட்டு உபகரணங்கள் வாங்குவதற்காக மொத்தம் ரூ.1.35 லட்சத்திற்கான காசோலைகளையும், வில்வித்தை வீரர்கள் ப.சதீஷ்குமார் மற்றும் ர. பிரித்தீஸ்வரன் ஆகியோருக்கு விளையாட்டு உபகரணங்கள் வாங்குவதற்காக தலா 1 லட்சம் ரூபாய்க்கான காசோலைகளையும் வழங்கினார்.

மேலும் பிப்ரவரி 2026 ல் சவுதி அரேபியாவில் நடைபெறவுள்ள ஆசிய பாரா ரோடு சைக்ளிங் சாம்பியன்ஷிப்பில் கலந்து கொள்வதற்காக பாரா சைக்ளிங் வீரர் பி. பிரதீப்புக்கு செலவீன தொகையாக 2,50,000 ரூபாய்க்கான காசோலையையும், ஆசிய ரோடு சைக்ளிங் சாம்பியன்ஷிப்பில் கலந்து கொள்வதற்காக சைக்ளிங் வீரர் ர.சஞ்சய்க்கு செலவீன தொகையாக 2,00,000 ரூபாய்க்கான காசோலையையும் தமிழ்நாடு சாம்பியன் அறக்கட்டளை நிதியிலிருந்து தமிழ்நாடு துணை முதல்அமைச்சர் வழங்கினார்.

இதன்படி, தமிழ்நாடு துணை முதல்அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் தமிழ்நாடு சாம்பியன்ஸ் அறக்கட்டளை நிதியிலிருந்து 8 விளையாட்டு வீரர், வீராங்கனைகளுக்கு சர்வதேச போட்டிகளில் பங்கேற்கவும், விளையாட்டு உபகரணங்கள் வாங்குவதற்காகவும்மொத்தம் 7.85லட்சம் ரூபாய்க்கான காசோலைகளை வழங்கினார்.

இதனை தொடர்ந்து, கேலோ இந்தியா கடற்கரை விளையாட்டு போட்டிகளில் பீச் வாலிபால் போட்டியில் பதக்கங்கள் வென்ற தமிழ்நாடு வீராங்கனைகள் க.தீபிகா, சு.பவித்ரா, ம.சுவாதி, அ.தர்ஷினி மற்றும் வீரர்கள் வி.ராஜேஷ், சோ. பரத், செ.அபிதன், உ.பூந்தமிழன் ஆகியோர் தமிழ்நாடு துணை முதல்அமைச்சரை சந்தித்து வாழ்த்து பெற்றனர்.

இந்நிகழ்ச்சியில் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை முதன்மை செயலாளர் சத்யபிரத சாகு இ.ஆ.ப., தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணைய உறுப்பினர்செயலர் ஜெ. மேகநாத ரெட்டி இ.ஆ.ப. உள்பட அரசு அலுவலர்கள், விளையாட்டு வீரர், வீராங்கனைகள் கலந்து கொண்டனர்.

# நாடாளுமன்றத்தில் குடியரசு தலைவர் உரை; மக்கள் ஏமாற மாட்டார்கள் வைகோ



சென்னை, ஜன.30

மதிமுக பொதுச்செயலாளர் வைகோ வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவித்திருப்பதாவது;

நாடாளுமன்றக் கூட்டத்தொடர் தொடங்குவதால், இன்று நாடாளுமன்றத்தில் உரையாற்றிய குடியரசுத் தலைவர் திரௌபதி முர்மு 2047க்குள் இந்தியாவை ஒரு “வளர்ந்த நாடாக” மாற்றுவதற்கான தொலைநோக்குப் பார்வையை அரசு கொண்டிருக்கிறது. கடந்த ஒரு வருடத்தில் இந்தியா அடைந்த அதிவேகப் பொருளாதார முன்னேற்றத்தையும், உலக அரங்கில் இந்தியாவின் மதிப்பையும் உயர்த்தியுள்ளது என்று தெரிவித்து இருக்கிறார்.

இந்தியாவின் பொருளாதாரம் வளர்ச்சியை நோக்கி முன்னேறிக் கொண்டு இருக்கிறது என்றும், உலகப் பொருளாதாரத்தில் உலகில் முதலில் உள்ள ஐந்து நாடுகளில் வரிசையில் இந்தியா முன்னேறிக் கொண்டிருக்கிறது என்றும்,

சென்ற ஆண்டு கடைசி காலாண்டில் 5.6 சதவீதமாக இருந்த ஜிடிபியின் வளர்ச்சி விகிதம் ஒரே ஆண்டில் வேகவேகமாகப் பாய்ந்து முன்னேறி தற்போது

8.2 சதவீதமாக உள்ளது என்றும் மத்திய அரசு கடந்த ஆண்டு அறிக்கை வெளியிட்டது.

இந்தியாவின் வளர்ச்சி விகிதம் பற்றி இந்திய மத்திய அரசு அதாவது ஜிடிபி பற்றி வெளியிட்டுள்ள அறிக்கை, அதற்கு முன் வைக்கப்பட்டுள்ள தரவுகள் ஆகியவை தரவரிசைப்படி பார்த்தால் சி பிரிவு தரவரிசை தகுதியிலேயே உள்ளது.

சர்வதேச செலாவணி நிதியம் ஐ.எம்.எப். இந்தியா வெளியிட்டுள்ள ஜி.டி.பி குறித்த அறிக்கையை சிதரவரிசைப்படி நிராகரித்துள்ளது என்பதை நினைவில் கொள்ள வேண்டும். இந்தியாவின் நாணய மதிப்பானது சர்வதேச அளவில் வீழ்ச்சி அடைந்து வருகிறது. குறிப்பாக அமெரிக்க டாலருக்கு நிகரான இந்திய நாணயத்தின் மதிப்பு 91 ரூபாயாக உயர்ந்துள்ளது.

குடியரசு தலைவர் தனது உரையில், ஒடுக்கப்பட்ட மற்றும் பின்தங்கிய மக்களின் முன்னேற்றமே அரசின் முக்கிய நோக்கம். அனைவரையும் உள்ளடக்கிய வளர்ச்சியை நோக்கிய பயணத்தை அரசு முன்னெடுத்து வருகிறது என்றார்.

சமீபத்தில் வெளியிடப்பட்ட உலக சமத்துவமின்மை பற்றிய அறிக்கை, பொருளாதார வல்லுநர்களான லூகாஸ் சான்செல், ரிக்கார்டோ கோமஸ்கரெரா, ரோவைடா மோஷரிப் மற்றும் தாமஸ் பிக்கெட்டி

ஆகியோரால் தயாரிக்கப்பட்ட ‘உலக சமத்துவமின்மை அறிக்கை 2026’ *(World Inequality Report 202)*இல் வருமானம் மற்றும் சொத்து குறித்த தரவுகள் இடம் பெற்றுள்ளன.

இந்திய மக்கள்தொகையில் 10 சதவீதத்தினர் மட்டுமே இந்தியாவின் மொத்த வருமானத்தில் தோராயமாக 58 சதவீதத்தை ஈட்டுகிறார்கள் என்று அறிக்கை கூறுகிறது.

மக்கள் தொகையில் கீழ் அடுக்கில் உள்ள 50 சதவீதத்தினர் இந்தியாவின் வருமானத்தில் 15 சதவீதத்தை மட்டுமே ஈட்டுகிறார்கள் என்கிறது அந்த அறிக்கை. இந்தியாவில் சமத்துவமின்மை, வருமானத்துடன் மட்டும் நின்றுவிடவில்லை.

செல்வத்தில் உள்ள இடைவெளியும் இன்னும் ஆழமாகி இருப்பதாக அறிக்கை கூறுகிறது. இந்தியப் பணக்காரர்களில் 10 சதவீதம் பேர் நாட்டின் செல்வத்தில் தோராயமாக 65 சதவீதத்தை சொந்தமாகக் கொண்டுள்ளனர்.

இந்த 10 சதவிகிதத்துக்குள், முதல் ஒரு சதவிகிதம் பேர் நாட்டின் மொத்தச் சொத்தில் 40 சதவிகிதத்தைக் கொண்டுள்ளனர் என்று இந்த ஆய்வு அறிக்கை முன் வைக்கிறது. உண்மை நிலை எவ்வாறு இருக்க, எல்லோரையும் உள்ளடக்கிய வளர்ச்சி என்று மோடி அரசு குடியரசுத் தலைவர் உரையில் தம்பட்டம் அடித்துக் கொண்டுள்ளது.

கடந்த 10 ஆண்டுகளாக இந்தியாவில்முஸ்லிம்கள், ,கிறிஸ்தவர்கள் மற்றும் தலித்துகள் மீதான தாக்குதல்கள் அதிகரித்திருக்கின்றன. குறிப்பாக பாஜக ஆளும் மாநிலங்களில் சிறுபான்மை மக்கள் மீது கொடூரமான வன்முறைகள் கட்டவிழ்த்துவிடப்படுகின்றன. மாநில அரசுகளின் அதிகாரங்கள் திட்டமிட்டு சூறையாடப்படுகின்றன.

நீதித்துறை, நிர்வாக துறை, தேர்தல் ஆணையம் உள்ளிட்ட இறையாண்மை மிக்க அமைப்புகள் அரசியலமைப்புச் சட்டத்தை மீறி ஆளும் பாஜக அரசின் கைப்பாவையாக மாற்றப்பட்டு வருகின்றன.

நாடாளுமன்ற ஜனநாயகம் பெரும் வீழ்ச்சியை சந்தித்து வருகிறது.

இந்நிலையில், குடியரசுத் தலைவர் உரையின் மூலம் மத்திய பாஜக அரசு தம்மைத் தாமே புகழ்ந்து கொள்வதை நாட்டு மக்கள் உணர்ந்திருப்பதால் ஏமாற்றி விட முடியாது.

இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# கோவில் சொத்துகளைத் திருடும் கொள்ளை மாடல் அரசு எப்போது திருந்தும்? நயினார் நாகேந்திரன்

சென்னை, ஜன.30

தமிழக பாஜக தலைவர் நயினார் நாகேந்திரன் வெளியிட்டுள்ள எக்ஸ் தள பதிவில் தெரிவித்திருப்பதாவது;

மதுரை கள்ளழகர் திருக்கோவிலின் உபரி நிதி ரூ.40 கோடியில் வணிக வளாகங்கள் கட்டுவதற்கு ஒப்புதல் வழங்கிய அரசாணையை ரத்து செய்து திமுக அரசின் கொள்ளையைத் தடுத்துள்ளது உயர்நீதிமன்ற மதுரைக்கிளை.திருக்கோவில் நிதி ரூ.107 கோடியில் இருந்து ரூ.62 கோடியாகக் குறைந்துள்ளது தெய்வக் குற்றமாகும் என்று சரியாகச் சுட்டிக்காட்டியதோடு, கோவிலைத் தனிப்பட்ட சொத்தாகக் கருத முடியாது என்று திமுக அரசுக்கு சவுக்கடியும் வழங்கியுள்ளது வரவேற்கத்தக்கது.

அறங்காவலர் குழுவே இல்லாமல் கோவிலை நிர்வகிப்பதில் தொடங்கி கமிஷன் பெறும் நோக்கில், கோவில் நிதியில் வணிக வளாகம் கட்ட முயற்சிக்கும் திமுக அரசு, ஆட்சி முடியும் தருவாயிலாவது திருந்துமா என்பது கேள்விக்குறியே! கோவில் சொத்து கோவிலுக்கே என்பதை உணராமல், உண்டியல் தொகையில் கல்லா கட்டப் பார்க்கும் திமுக அரசு தனது பேராசையாலேயே அழியும்! இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# ‘எங்களுக்கு யாரும் பூஸ்ட் கொடுக்க தேவையில்லை’ செல்வப்பெருந்தகை



சென்னை, ஜன.30

தமிழக வெற்றிக் கழகம் கட்சி தலைவர் விஜய்யின் தந்தையும், இயக்குநருமான எஸ்.ஏ.சந்திரசேகர் நேற்று செய்தியாளர்களிடம் பேசியபோது, ‘காங்கிரஸ் கட்சிக்கு விஜய் பூஸ்ட் கொடுக்கிறார். அதை அவர்கள் பயன்படுத்திக் கொள்ள வேண்டும்’ என்றார்.

இது குறித்து காங்கிரஸ் மாநில தலைவர் செல்வப்பெருந்தகையிடம் செய்தியாளர்கள் கேள்வி எழுப்பினர். இதற்கு பதிலளித்த அவர்,

“எங்கள் தொண்டர்கள் எல்லோரும் நல்ல உத்வேகத்துடன் தான் இருக்கிறார்கள். எங்களுக்கு யாரும் பூஸ்ட் கொடுக்க தேவையில்லை. ஏற்கனவே ராகுல் காந்தி எங்கள் எல்லோருக்கும் பூஸ்ட், ஹார்லிக்ஸ் எல்லாம் கொடுத்திருக்கிறார். இருந்தாலும் எங்களுக்கு பூஸ்ட் கொடுப்பதாக சொன்னதற்கு நன்றி” என்று தெரிவித்தார்.

# போலி இன்சூரன்ஸ் ஆவணம் தயாரித்து மோசடி: 2 பேர் மீது வழக்கு

தூத்துக்குடி, ஜன.30

தூத்துக்குடி மாவட்டம் திருச்செந்தூரை சேர்ந்த பிரகாஷ் (வயது 44) என்பவர் கடந்த 2014ம் ஆண்டு கோவை உக்கடம் லாரிப்பேட்டை அருகே சென்றபோது, பைக் மீது லாரி மோதிய விபத்தில் காயமடைந்தார்.

இது தொடர்பாக விபத்து ஏற்படுத்திய லாரி உரிமையாளர், இன்சூரன்ஸ் மூலம் பிரகாஷ் தரப்பினருக்கு உரிய இழப்பீடு வழங்க வேண்டும் என்று கோர்ட்டு உத்தரவிட்டது.

ஆனாலும் கோர்ட்டு உத்தரவுக்குப் பிறகும் அவர்களுக்கு இழப்பீட்டு தொகை வழங்கப்படவில்லை.

இதில் விபத்து ஏற்படுத்திய லாரி உரிமையாளர் மகேஸ்வரன்,

டிரைவர் தென்னரசு உள்ளிட்டவர்கள் போலி ஆவணம் தயாரித்து ஏமாற்றியதாக போலீசார் மேற்சொன்ன 2 பேர்மீதும் வழக்குப்பதிவு செய்தனர்.

# ஐரோப்பிய நாடுகளுடன் ஒப்பந்தம்: திருப்பூர் ஆயத்த ஆடை வர்த்தகம் 2 மடங்கு அதிகரிக்க வாய்ப்பு



திருப்பூர், ஜன.30

இந்தியா ஐரோப்பிய ஒன்றிய நாடுகளுடன் வரியில்லா வர்த்தக ஒப்பந்தம் கையெழுத்தாகியுள்ளது. இதன் மூலம் ஆயத்த ஆடைகளை இந்தியாவில் இருந்து குறிப்பாக திருப்பூரில் இருந்து வரியில்லாமல் ஐரோப்பிய ஒன்றிய நாடுகளுக்கு அனுப்பி வைக்க முடியும். இதனால் ஆயத்த ஆடைத் துறையினர் அதிக உற்சாகம் அடைந்துள்ளனர்.

இந்த ஒப்பந்தத்தை ஆயத்த ஆடை ஏற்றுமதி மேம்பாட்டு கவுன்சில் (ஏ.இ.பி.சி.) வரவேற்றும், பிரதமருக்கும், மத்திய வர்த்தக தொழில் துறை மந்திரிக்கும் நன்றியையும் தெரிவித்துள்ளது. இது உலகின் மிகப்பெரிய வர்த்தக கட்டமைப்புடன் இந்தியாவுக்கு நீண்டகால வணிக உறவை உருவாக்கும்.

இந்திய ஆடைத்துறைக்கு ஒரு மைல்கல்லாக அமையும். இந்த ஒப்பந்தம் அடுத்த 3 ஆண்டுகளில் இந்திய ஆயத்த ஆடை ஏற்றுமதியை இரட்டிப்பாக்கும். இந்தியாவில் ஆடைத்துறையில் புதிய முதலீடு மற்றும் வேலைவாய்ப்புகள் பெருகும். இதன் மூலம் ஆண்டுக்கு 20 முதல் 25 சதவீதம் ஆயத்த ஆடைத்துறை வளர்ச்சி பெறும்.

இந்திய ஆயத்த ஆடை ஏற்றுமதியில் ஐரோப்பிய ஒன்றியத்தின் பங்கு 28 சதவீதமாக உள்ளது. ஆனால் ஐரோப்பிய ஆடை சந்தையில் இந்தியாவின் பங்களிப்பு 2.9 சதவீதம் மட்டுமே. இந்த ஒப்பந்தம் மூலம் இந்திய ஆயத்த ஆடைத்துறை பெரிதும் பயன்பெறும் என்று ஏ.இ.பி.சி. தெரிவித்துள்ளது.

இதுகுறித்து திருப்பூர் ஏற்றுமதியாளர்கள் சங்கம் வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில்,

இந்தியா ஐரோப்பிய கூட்டமைப்புகளுக்கிடையே வரியில்லா வர்த்தக ஒப்பந்தம், இன்னும் ஒரு வருட காலத்துக்குள் அமலுக்கு வர இருக்கிறது. இந்த ஒப்பந்தத்தின் மூலம் ஜவுளித்துறை அதிகம் பயன்பெறும். ஏற்கனவே திருப்பூரில் இருந்து ஆண்டுக்கு ரூ.25 ஆயிரம் கோடி வர்த்தகம் நடக்கிறது. இந்த ஒப்பந்தம் காரணமாக, ஐரோப்பிய நிறுவனங்கள் இந்தியாவை நோக்கி திரும்பும்போது வர்த்தக வாய்ப்புகள் பலமடங்கு பெருகும்.

அமெரிக்காவின் கூடுதல் வரி விதிப்பால் தற்காலிக பின்னடைவை சந்தித்த திருப்பூர், இந்த ஒப்பந்தம் காரணமாக நம்பிக்கை பெற்றுள்ளது. 2030ம் ஆண்டுக்குள் திருப்பூரில் இருந்து ஐரோப்பிய நாடுகளுக்கான ஆயத்த ஆடை ஏற்றுமதி இருமடங்கு அதிகரிக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

# முதல்வருக்கு கருப்புக்கொடி காட்ட முயன்ற 7 பேர் கைது

தஞ்சாவூர் மாவட்டம் பாபநாசம் அருகே உள்ள திரு ஆரூரான் சர்க்கரை ஆலை கரும்பு விவசாயிகளுக்கு வழங்க வேண்டிய நிலுவைத்தொகை ரூ.212 கோடியை வழங்க கோரி ஆயிரம் நாட்களுக்கு மேலாக கரும்பு விவசாயிகள் போராடி வருகின்றனர். இந்த நிலையில் நேற்று கும்பகோணத்தில் நடந்த இந்திய யூனியன் முஸ்லிம் லீக் கட்சியின் மாநாட்டில் கலந்து கொள்ள முதல்அமைச்சர் மு.க.ஸ்டாலின் சென்றார். அப்போது முதல்அமைச்சர் மு.க.ஸ்டாலினு க்கு தஞ்சைகும்பகோணம் தேசிய நெடுஞ்சாலையான வேம்புக்குடி சுங்கச்சாவடி அருகே கரும்பு விவசாயிகள் கருப்புக்கொடி காட்ட முயன்றனர்.

இதனையடுத்து முதல்அமைச்சருக்கு கருப்புக்கொடி காட்ட முயன்ற தற்காக கரும்பு விவசாயிகள் 7 பேரை போலீசார் கைது செய்தனர்.

# சட்டவிரோத மது பார்கள் மீதான புகாரை விசாரித்து நடவடிக்கை: மதுரை ஐகோர்ட்டு அறிவுறுத்தல்



கரூர், ஜன.30

கரூர் மாவட்டம் வயலூர் பகுதியைச் சேர்ந்த சூரியபிரகாஷ், மதுரை ஐகோர்ட்டில் தாக்கல் செய்த மனுவில் கூறியிருந்ததாவது:

கரூர் மாவட்டத்தில் 89 டாஸ்மாக் கடைகளுடன் பார் வசதியும் செய்யப்பட்டு உள்ளது. இவற்றில் 45 கடைகளின் பார்களுக்கு மட்டுமே அனுமதி பெறப்பட்டு உள்ளது. மற்றவை சட்டவிரோதமாக செயல்படுகின்றன.

கடந்த ஆண்டில் 44 டாஸ்மாக் கடைகளுடன் பார் நடத்த ஏலம் விடுவது தொடர்பான அறிவிப்பு வெளியானது. இதில் ஒருவருக்கு மட்டுமே அனுமதி வழங்கப்பட்டது. ஆனால் மற்ற 43 டாஸ்மாக் கடைகளிலும் சட்டவிரோதமாக பார்கள் செயல்படுகின்றன. இதனால் அரசுக்கு வருவாய் இழப்பு ஏற்படுகிறது. எனவே கரூர் மாவட்டத்தில் சட்டவிரோதமாக செயல்படும் மதுபான பார்களை மூடவும், பார்களுக்கான ஏலம் நடத்தவும் உத்தரவிட வேண்டும். இவ்வாறு மனுவில் கூறியிருந்தார்.

இந்த வழக்கு நீதிபதிகள் ஜெயச்சந்திரன், ராமகிருஷ்ணன் ஆகியோர் முன்பு விசாரணைக்கு வந்தது.அப்போதுநீதிபதிகள், மனுதாரரின் குற்றச்சாட்டுக்கு போதுமான ஆதாரங்கள் இல்லாமல் பொதுவாக கூறப்பட்டு உள்ளது. எந்தெந்த டாஸ்மாக் கடைகளுடன் சட்டவிரோதமாக பார்கள் நடத்தப்படுகின்றன என்ற விவரம் தாக்கல் செய்யப்படவில்லை.

இதுதொடர்பாக உரிய ஆதாரங்களுடன் புகார் மனுவை மனுதாரர் அளித்தால் அதனை டாஸ்மாக் நிறுவன செயலாளர், மாவட்ட மேலாளர், கரூர் மாவட்ட கலெக்டர், போலீஸ் சூப்பிரண்டு ஆகியோர் பரிசீலித்து உரிய உத்தரவு பிறப்பிக்க வேண்டும். இந்த வழக்கு முடித்து வைக்கப்படுகிறது என உத்தரவிட்டனர்.


# சமூக வலைதளத்தில் பிளஸ் 2 மாணவியின் ஆபாச படம் பரவல்

கன்னியாகுமரி மாவட்டம், குளச்சல் அருகே உள்ள ஒரு மீனவ கிராமத்தை சேர்ந்தவர் 16 வயது சிறுமி பிளஸ் 2 படித்து வருகிறார்.

இந்த நிலையில் கடந்த சில நாட்களுக்கு முன் மாணவி அரை நிர்வாண நிலையில் இருப்பது போன்ற ஆபாச புகைப்படம் சமூக வலைத்தளங்களில் பரவி வைரலானது.

இதனையடுத்து மாணவியின் பெற்றோர் இதுபற்றி குளச்சல் அனைத்து மகளிர் போலீஸ் நிலையத்தில் புகார் அளித்தனர். அதன்பேரில் போலீசார் வழக்குப்பதிவு செய்து ஆபாச படத்தை சமூக வலைத்தளத்தில் வெளியிட்டது யார் என்று விசாரணை நடத்தி வருகின்றனர்.

# 17 ஆண்டுகளாக பணியாற்றிய ஊழியர் நீக்கம்; வங்கி உத்தரவை ரத்து செய்த சென்னை ஐகோர்ட்டு



சென்னை, ஜன.30

இலங்கையில் இருந்து திருக்கல்யாணமலர் என்பவர் சிறு வயதிலேயே அகதியாக தமிழ்நாட்டுக்கு வந்து சேர்ந்துள்ளார். அவர், கடந்த 2008ம் ஆண்டு எஸ்.பி.ஐ. வங்கியில் பணிக்கு சேர்ந்துள்ளார்.

பணியில் சேரும்போது விண்ணப்பத்தில் குடியுரிமை தொடர்பாக எந்த விபரங்களும் கேட்கப்படாத நிலையில், 17 ஆண்டுகளாக பணியாற்றி வந்துள்ளார். இந்நிலையில், அவர் இந்தியர் இல்லை என்பதால் 17 ஆண்டுகளுக்கு பிறகு பணி நீக்கம் செய்யப்பட்டு உள்ளார்.

இது சரியான நடவடிக்கை அல்ல என்றும், பணி நீக்கம் செய்த எஸ்.பி.ஐ. வங்கியின் உத்தரவை ரத்து செய்ய கோரியும் சென்னை ஐகோர்ட்டில் அவர் முறையீடு செய்து உள்ளார். இதுதொடர்பான மனுவை விசாரித்த ஐகோர்ட்டு நீதிபதி, மனுதாரர் பணியில் சேரும்போது இலங்கை அகதி என்பதை மறைக்கவில்லை. 17 ஆண்டுகளாக எந்த பிரச்சனையும் இல்லாத நிலையில் தற்போது பணி நீக்கம் செய்யப்பட்டு உள்ளார். இதனை ஏற்க முடியாது. இது அவருடைய குடும்பத்தினரை பாதிக்கும். அரசியலமைப்பு சட்டம் இந்திய குடிமக்களுக்கு அளிக்கப்பட்ட சில உரிமைகளை தவிர, வாழ்வுரிமை அடிப்படையில் இந்திய குடிமக்களுக்கு இணையாக அகதிகளாக வந்தோரும் உரிமை கோரலாம் எனக்கூறி பணி நீக்க உத்தரவை ரத்து செய்து உத்தரவிட்டார்.

தினகனி
NAMADHU DHINA KANI DAILY MORNING NEWSPAPER
PRESS REGISTER GENERAL OF INDIA
PRGI NO TNTAM/2023/88253
30.01.2026

# பைக்கில் சென்ற போது விபரீதம்: தாயின் மடியில் இருந்து விழுந்த குழந்தை பலி

அந்தியூர், ஜன.30

ஈரோடு மாவட்டம் அந்தியூர் அருகே உள்ள காட்டுப்பாளையம் பகுதியைச் சேர்ந்தவர் சத்தியமூர்த்தி. அவருடைய மனைவி பிரியா. இவர்களுக்கு பிறந்து 11 மாதமே ஆன தேஜி என்ற பெண் குழந்தை இருந்தது. இந்த நிலையில் காட்டுப்பாளையத்தில் உள்ள உறவினர் வீட்டு விசேஷத்துக்காக நேற்று காலை சத்தியமூர்த்தி தனது மனைவி, குழந்தையுடன் பைக்கில் சென்று கொண்டிருந்தார்.

மடியில் குழந்தையை வைத்தபடி பிரியா அமர்ந்திருந்தார். இந்த நிலையில் செம்புளிச்சாம்பாளையம் பெட்ரோல் விற்பனை நிலையம் அருகே சென்றபோது பெட்ரோல் போடுவதற்காக மோட்டார் சைக்கிளை சத்தியமூர்த்தி திருப்பினார். அப்போது மோட்டார் சைக்கிளும், எதிரே வந்த காரும் எதிர்பாராதவிதமாக நேருக்கு நேர் மோதிக்கொண்டன.

இந்த விபத்தில் குழந்தை தேஜி, தாய் பிரியாவின் மடியில் இருந்து நழுவி கீழே விழுந்தது. இதில் குழந்தை தேஜி தலையில் படுகாயம் ஏற்பட்டது. மேலும் பிரியாவும் கீழே விழுந்ததில் லேசான காயத்துடன் உயிர் தப்பினார். படுகாயம் அடைந்த குழந்தையை சிகிச்சைக்காக அந்தியூர் அரசு மருத்துவமனையில் சேர்த்தனர். பின்னர் அங்கிருந்து மேல்சிகிச்சைக்காக ஈரோடு அரசு மருத்துவமனைக்கு கொண்டு சென்றனர். அங்கு டாக்டர்கள் தீவிர சிகிச்சை அளித்தும் பலனின்றி குழந்தை பரிதாபமாக உயிரிழந்தது. இதுதொடர்பாக கார் டிரைவரான கோபி பகுதியைச் சேர்ந்த புஷ்பராஜ் (வயது 35) என்பவர் மீது வழக்குப்பதிவு செய்து போலீசார் விசாரணை நடத்தி வருகின்றனர்.

# "சிறுபான்மையினர் வாக்குகளை பிரிக்க விஜய்பா. ஜனதாவினர் நாடகம்" சபாநாயகர் அப்பாவு குற்றச்சாட்டு



நெல்லை, ஜன.30

நெல்லையில் நேற்று நடந்த அரசு நிகழ்ச்சியில் கலந்து கொண்ட சபாநாயகர் அப்பாவு நிருபர்களுக்கு பேட்டி அளித்தார். அப்போது அவர் கூறியதாவது;

மராட்டிய துணை முதல்அமைச்சர் அஜித் பவார் மறைவுக்கு சட்டப்பேரவை தலைவர் என்ற முறையில் இரங்கல் தெரிவித்துக் கொள்கிறேன். மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட 234 சட்டப்பேரவை உறுப்பினர்கள் கொண்ட சபையில், மரபுப்படி தயாரித்துக் கொடுத்த உரையை வாசிப்பதுதான் கவர்னரின் வேலை. ஆனால், அவர் அதைச் செய்யாமல் வெளியேறியது மரபல்ல. அவருக்கு சொந்த கருத்துக்களை பேசவோ, தவிர்ப்பதற்கோ அதிகாரம் இல்லை. தி.மு.க. கூட்டணி தொடர்பான விவகாரங்களை தலைமை மட்டுமே பேச வேண்டும். கீழ் மட்டத்தில் உள்ளவர்கள்பேசுவதைதவிர்க்கவேண்டும் என அறிவுறுத்தப்பட்டுள்ளது.

விஜய்யும், பா.ஜனதாவினரும் இணைந்து நாடகம் ஆடுகிறார்கள். இவர்கள் இருவரும் கொள்கை ரீதியாக இணைந்து, தி.மு.க.விற்கு எதிராக சிறுபான்மையினர் வாக்குகளை பிரிக்க முயற்சி செய்கிறார்கள்.நடிகர் விஜய் சினிமாவில் நடிப்பதை விட்டுவிட்டு, தற்போது அரசியலுக்கு வந்து பா.ஜனதாவுடன் சேர்ந்து நடித்துக் கொண்டிருக்கிறார்.

வட இந்தியாவில் இஸ்லாமிய வாக்குகளைப் பிரிக்க, வேறு கட்சியைச் சேர்ந்த நாடாளுமன்ற உறுப்பினர் ஓவைசியை பயன்படுத்துவது போல், தமிழகத்தில் சிறுபான்மையினர் மற்றும் தி.மு.க. எதிர்ப்பு வாக்குகளைப் பிரிக்க விஜய்யை பா.ஜனதா பயன்படுத்துகிறது. ஆனால், சிறுபான்மை மக்கள் தெளிவாக இருக்கிறார்கள். பா.ஜனதா ஆதரவு சக்திகளுக்கு அவர்கள் வாக்களிக்க மாட்டார்கள்.

இவ்வாறு அவர் கூறினார்.

# பட்டா மாறுதலுக்கு ரூ.30 ஆயிரம் லஞ்சம் வாங்கிய வி.ஏ.ஓ. கைது

நாகப்பட்டினம் மாவட்டத்தில் உள்ள தெற்கு பொய்கைநல்லூரை சேர்ந்தவர் தம்பியப்பன்.

இவர் தெற்கு பொய்கை நல்லூர் கிராம நிர்வாக அலுவலர் (வி.ஏ.ஓ.) சபரிநாதனை சந்தித்து பட்டா மாறுதல் குறித்து விவரம் கேட்டுள்ளார்.

அப்போது பட்டா மாறுதலுக்காக வி.ஏ.ஓ. சபரிநாதன் ரூ.30 ஆயிரம் லஞ்சம் கேட்டுள்ளார்.

இதனையடுத்து ரசாயனம் தடவிய பணத்தை வி.ஏ.ஓ. சபரிநாதனிடம் தம்பியப்பன் கொடுத்தபோது, மறைந்து இருந்த லஞ்ச ஒழிப்பு போலீசார் சபரிநாதனை கையும், களவுமாக பிடித்து கைது செய்தனர்.

# திருப்பத்தூர்: கோவிலில் தாலி, உண்டியல் பணம் திருட்டு

திருப்பத்தூர் மாவட்டம், ஆம்பூர் அடுத்த பாலூர் பகுதியில் ஆனந்தீஸ்வரர் கோவிலில் இரவில் வழக்கம் போலபூஜையைமுடித்துவிட்டுகோவிலைபூட்டிவிட்டு சென்றுள்ளனர்.

இந்த நிலையில் நேற்று காலை பூசாரி கோவிலுக்கு வந்தபோது கோவிலின் பூட்டு உடைக்கப்பட்டு இருந்தது. இதனால் அதிர்ச்சி அடைந்த அவர் உள்ளே சென்று பார்த்தார்.

அங்கு கோவிலின் உண்டியலும் உடைக்கப்பட்டு அதிலிருந்த சுமார் ரூ.25 ஆயிரம் திருட்டு போயிருந்தது. மேலும் அம்மன் கழுத்தில் இருந்த சுமார் ஒரு பவுன் தாலியையும் மர்ம நபர்கள் திருடிச்சென்றது தெரியவந்தது.

இதனையடுத்து ஆம்பூர் பகுதியில் ஆனந்தீஸ்வரர் கோவிலில் தாலி, உண்டியல் பணத்தை திருடிய மர்ம நபர்களை போலீசார் வலைவீசி தேடி வருகின்றனர்.

# 3ந் தேதி கூட்டணியை அறிவிப்பேன் பிரேமலதா விஜயகாந்த் தகவல்

ஸ்ரீவில்லிபுத்தூர், ஜன.30

விருதுநகர் மாவட்டம் ஸ்ரீவில்லிபுத்தூர் ஆண்டாள் கோவிலில் தே.மு.தி.க. பொதுச்செயலாளர் பிரேமலதா விஜயகாந்த், அவருடைய மகன் விஜய பிரபாகரன் ஆகியோர் நேற்று சாமி தரிசனம் செய்தனர். பின்னர் பிரேமலதா நிருபர்களுக்கு அளித்த பேட்டியில் கூறியதாவது:

தே.மு.தி.க. தமிழகத்தில் உள்ள அனைத்து கட்சிகளுடனும், மத்திய அரசுடனும் நல்ல நட்பு உறவை கொண்டுள்ளது.

தமிழகம் முழுவதும் தே.மு.தி.க.வுக்கு மக்களிடையே நல்ல ஆதரவு உள்ளது. தமிழகத்தில் சட்டம், ஒழுங்கு கேள்விக்குறியாக உள்ளது.

கடந்த தேர்தல் வாக்குறுதியாக அறிவித்ததில், 50 சதவீத திட்டங்களை மட்டுமே தி.மு.க. அரசு நிறைவேற்றி உள்ளது. சென்னையில் வருகிற 3ந் தேதி கூட்டணி குறித்து அறிவிப்பேன்.

இவ்வாறு அவர் கூறினார்.

# இன்றைய ராசி பலன்கள் (30.01.2026)

**மேஷம்:** இன்று உங்களுக்குச் சவால்கள் நிறைந்த நாளாக இருந்தாலும், விடா முயற்சியால் வெற்றி காண்பீர்கள். பணியிடத்தில் மேலதிகாரிகளின் பாராட்டு கிடைக்கும்.

**ரிஷபம்:** குடும்பத்தில் மகிழ்ச்சியான சூழல் நிலவும். புதிய முதலீடுகள் செய்ய இன்று உகந்த நாள். கணவன் மனைவி இடையே நெருக்கம் அதிகரிக்கும்.

**மிதுனம்:** பேச்சில் நிதானம் தேவை. தேவையற்ற வாக்குவாதங்களைத் தவிர்ப்பது நல்லது. பயணங்களின் போது உடைமைகளில் கவனம் இருக்கட்டும்.

**கடகம்:** நீண்ட நாள் ஆசைகள் நிறைவேறும். நண்பர்கள் மற்றும் உறவினர்களின் உதவி கிடைக்கும். வியாபாரத்தில் லாபம் எதிர்பார்த்ததை விட அதிகமாக இருக்கும்.

**சிம்மம்:** தொழிலில் நல்ல முன்னேற்றம் ஏற்படும். தந்தையின் உடல்நலத்தில் அக்கறை காட்டுங்கள். அரசு வழி காரியங்கள் தடையின்றி முடியும்.

**கன்னி:** திட்டமிட்ட காரியங்கள் கைகூடும். புதிய நண்பர்களின் அறிமுகம் உற்சாகம் தரும். ஆன்மீகப் பயணங்கள் மேற்கொள்ள வாய்ப்பு உண்டு.

**துலாம்:** பணவரவு திருப்திகரமாக இருக்கும். ஆடம்பரப்பொருட்கள்வாங்குவதில் ஆர்வம் காட்டுவீர்கள். கலைத்துறையினருக்குப் புதிய வாய்ப்புகள் தேடி வரும்.

**விருச்சிகம்:** உடல் ஆரோக்கியத்தில் சிறு உபாதைகள் தோன்றி மறையும். பிறருக்குக் கடன் கொடுப்பதைத் தவிர்க்கவும். பொறுமை அவசியம்.

**தனுசு:** சுபச் செய்திகள் வந்து சேரும். திருமணப் பேச்சுவார்த்தைகள் சாதகமாக முடியும். பிள்ளைகளால் பெருமை சேரும்.

**மகரம்:** உழைப்பிற்கேற்ற ஊதியம் கிடைக்கும். சொத்துச் சேர்க்கைக்கான முயற்சிகள் பலன் தரும். பழைய நண்பர்களைச் சந்தித்து மகிழ்வீர்கள்.

**கும்பம்:** எதிர்ப்புகள் விலகும். வெளிவட்டாரத்தில் உங்களின் செல்வாக்கு உயரும். உத்தியோகத்தில் பதவி உயர்வுக்கான அறிகுறி தென்படும்.

**மீனம்:** மனதில் குழப்பங்கள் நீங்கி தெளிவு பிறக்கும். கொடுக்கல் வாங்கலில் நிதானம் தேவை. பெரியோர்களின் ஆசி கிட்டும்.

# பத்மஸ்ரீ விருது அறிவிப்பு: ஓவியரின் மனைவியிடம் செல்போனில் பேசிய மத்திய மந்திரி எல்.முருகன்

மேட்டுப்பாளையம், ஜன.30

நீலகிரி மாவட்டம் கோத்தகிரியை சேர்ந்த பழங்குடியின குரும்பா ஓவியர் கிருஷ்ணன். இவர் கோவை மாவட்டம் மேட்டுப்பாளையம் அருகே கல்லாறு பகுதியில்வசித்துவந்தார்.இதற்கிடையே அவர் இறந்து விட்டார். அவருக்கு பத்மஸ்ரீ விருதை, மத்திய அரசு சமீபத்தில் அறிவித்தது.

இந்தநிலையில் நேற்று மேட்டுப்பாளையம் அருகே கல்லாறு பாக்கு தோப்பில்குடிசைவீட்டில்வசித்து வரும் கிருஷ்ணனின் மனைவி சுசீலா மற்றும் அவர்களது குழந்தைகளை பா.ஜனதா மாநில செயற்குழு உறுப்பினர் சதீஸ்குமார் நேரில் சந்தித்து, இனிப்பு வழங்கி வாழ்த்து தெரிவித்தார். அப்போது மத்திய இணை மந்திரி எல்.முருகன், பத்மஸ்ரீ



விருது அறிவிக்கப்பட்ட கிருஷ்ணனின் மனைவி சுசீலாவிடம் செல்போனில் பேசினார்.

அத்துடன் குடும்பத்திற்கும், குழந்தைகளின் கல்விக்கும் தேவையான உதவிகளை செய்வதாக உறுதியளித்தார். அப்போது சுசீலா கண்ணீர் மல்க, மத்திய இணை மந்திரிக்கு நன்றி தெரிவித்தார்.

# 'ஜனநாயகன்' தணிக்கை விவகாரம்: வழக்கை வாபஸ் பெறுகிறதா பட தயாரிப்பு நிறுவனம்?




நடிகர் விஜய், நடிகைகள் பூஜா ஹெக்டே, மமிதா பைஜூ உள்ளிட்டோர் நடித்துள்ள திரைப்படம் ஜனநாயகன். இந்த திரைப்படம் பொங்கல் பண்டிகையை முன்னிட்டு கடந்த 9ந்தேதி வெளியாகும் என்று அறிவிக்கப்பட்டது.இந்த படத்துக்கு தணிக்கை சான்றிதழ் கேட்டு விண்ணப்பிக்கப்பட்டது. இந்த திரைப்படத்தை பார்த்த தணிக்கை வாரியம் உறுப்பினர்கள், படத்தை மறுஆய்வு குழு பரிசீலனைக்கு பரிந்துரை செய்தனர். இதை எதிர்த்து சென்னை ஐகோர்ட்டில், இந்த படத்தை தயாரித்துள்ள கே.வி.என். புரொடக்ஷன் நிறுவனம் வழக்கு தொடர்ந்தது. இந்த வழக்கை விசாரித்த நீதிபதி பி.டி. ஆஷா, மறுஆய்வு குழுவுக்கு செய்த பரிந்துரையை ரத்துசெய்து, ஜனநாயகன் படத்துக்கு உடனடியாக தணிக்கை சான்றிதழ் வழங்கவேண்டும் என்று கடந்த 8ந்தேதி தீர்ப்பு அளித்தார்.

இந்த தீர்ப்பை எதிர்த்து சென்னை ஐகோர்ட்டில் அடுத்த சில நிமிடங்களில் தணிக்கை வாரியம் மேல்முறையீடு செய்தது. தனி நீதிபதி உத்தரவுக்கு இடைக்கால தடையையும் பெற்றது. இதன் பின்னர், இந்த வழக்கை தலைமை நீதிபதி எம்.எம்.ஸ்ரீவத்சவா, நீதிபதி ஜி.அருள்முருகன் ஆகியோர் விசாரித்தனர். பின்னர் தீர்ப்பை தேதி குறிப்பிடாமல் தள்ளிவைத்து உத்தரவிட்டனர். இந்த நிலையில், இந்த வழக்கின் தீர்ப்பை நேற்று காலை 10.35 மணியளவில் நீதிபதிகள் பிறப்பித்தனர். அதில், "தணிக்கை சான்றிதழை உடனடியாக வழங்கவேண்டும் என்ற தனி நீதிபதி உத்தரவை ரத்து செய்கிறோம். படத்தை தயாரித்துள்ள நிறுவனம், மறுஆய்வு குழுவுக்கு தணிக்கை வாரியம் பரிந்துரைத்ததை எதிர்த்து மீண்டும் வழக்கை தாக்கல் செய்யவேண்டும். அந்த வழக்கை தனி நீதிபதி மீண்டும் விசாரிக்கவேண்டும். " என்று உத்தரவிட்டுள்ளனர்.

ஐகோர்ட் உத்தரவால் ஜனநாயகன் படம் ரிலீஸ் ஆவது மேலும் தாமதம் ஆகும் நிலை ஏற்பட்டுள்ளது. தீர்ப்பை எதிர்த்து மேல் முறையீடு செல்லலாமா? அல்லது தணிக்கை வாரியத்திடம் மறு ஆய்வு கோரலாமா என்பது பற்றி இன்று கேவிஎன் நிறுவனம் இன்று இறுதி முடிவு எடுக்கும் என்று சொல்லப்படுகிறது. ஜனநாயகன் படத்திற்கும் வரும் அடுத்தடுத்த சோதனைகளால் ரசிகர்கள் ஏமாற்றம் அடைந்துள்ளனர்.

# மம்முட்டி சிறப்பு தோற்றத்தில் நடித்துள்ள "சத்தா பச்சா" படம் தமிழில் வெளியாவது எப்போது?



அத்வைத் நாயர் இயக்கத்தில் நடிகர்கள் அசோகன், ரோஷன் மேத்யூ, விஷாக் நாயர் மற்றும் இஷான் சௌகத் ஆகியோர் நடித்துள்ள மலையாள படம் 'சத்தா பச்சா'. இசையமைப்பாளர்கள் ஷங்கர்இஷ்ஸான்லோய் கூட்டணி இசையமைக்கும் முதல் மலையாள திரைப்படமான 'சத்தா பச்சா' கடந்த 22ம் தேதி திரையரங்குகளில் வெளியானது.

இந்த படத்தில் மம்முட்டி, துல்கர் சல்மான் ஆகியோர் சிறப்புத் தோற்றத்தில் நடித்துள்ளது குறிப்பிடத்தக்கது. இந்தப் படத்திற்கான முதல் டிக்கெட்டை நடிகர் மோகன்லால் வாங்கிய வீடியோவை படக்குழு வெளியிட்டது. மலையாளத்தில் தொடர்ந்து நல்ல வரவேற்பை பெற்று வரும் இப்படம் ரூ. 40 கோடிக்கும் அதிகமாக வசூல் செய்துள்ளதாக கூறப்படுகிறது.

இந்த நிலையில், மலையாளத்தில் வரவேற்பை பெற்று வரும் இப்படம் தமிழிலும் வெளியாக உள்ளதாக படக்குழு அறிவித்துள்ளது. அதன்படி, இப்படம் வருகிற 30ந் தேதி வெளியாகும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

# 'ஓ ரோமியோ' படத்தின் புதிய பாடல்...கவனம் ஈர்க்கும் திஷா பதானி நடனம்

பிரபல இயக்குநர் விஷால் பரத்வாஜ் இயக்கத்தில், நடிகர் ஷாஹித் கபூர் நடிப்பில் உருவாகியுள்ள 'ஓ ரோமியோ' திரைப்படத்திலிருந்து 'ஆஷிகோன் கி காலனி' பாடல் வெளியாகி இருக்கிறது. திஷா பதானி நடனமாடியுள்ள இந்த பாடல் இணையத்தில் வைரலாகி வருகிறது.

இந்த ஆக்சன்திரில்லர் திரைப்படத்தை முன்னணி தயாரிப்பாளர் சஜித் நதியாத்வாலா தயாரித்துள்ளார். கதாநாயகியாக திரிப்தி திம்ரி நடித்துள்ளார்.

மேலும், நானா படேகர், பரிதா ஜலால், அவினாஷ் திவாரி, விக்ராந்த் மாஸ்ஸி, திஷா பதானி மற்றும் தமன்னா உள்ளிட்டோர் முக்கிய கதாபாத்திரங்களில் நடித்துள்ளனர்.

விஷால் பரத்வாஜ் ஷாஹித் கபூர் கூட்டணியில் உருவாகும் இந்தப் படம், பிப்ரவரி 13ம் தேதி உலகம் முழுவதும் திரையரங்குகளில் வெளியாக உள்ளது.

# நியூசிலாந்து அணி 50 ரன்கள் வித்தியாசத்தில் வெற்றி




இந்தியாவுக்கு சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ள நியூசிலாந்து கிரிக்கெட் அணி 3 ஒருநாள் 5 டி20 போட்டிகள் கொண்ட தொடரில் விளையாடி வருகிறது. இதில் ஒருநாள் தொடரை 21 என்ற கணக்கில் நியூசிலாந்து அணி கைப்பற்றியது.

இதையடுத்து, கடந்த 21ம் தேதி இரு அணிகளுக்கும் இடையே நடைபெற்ற 5 போட்டிகள் கொண்ட டி20 ஓவர் கிரிக்கெட் தொடரின் முதல் 3 ஆட்டங்களில் இந்திய அணி வெற்றி பெற்று தொடரையும் கைப்பற்றி விட்டது.


இந்நிலையில் இந்தியாநியூசிலாந்து அணிகள் இடையிலான 4வது 20 ஓவர் கிரிக்கெட் போட்டி ஆந்திர மாநிலம் விசாகப் பட்டினத்தில் இன்று நடைபெற்றது .இந்த போட்டிக்கான டாஸ் போடப்பட்டது.அதில் டாஸ் வென்ற இந்திய அணியின் கேப்டன் சூர்யகுமார் யாதவ் பந்துவீச்சை தேர்வு செய்தார். அதன்படி நியூசிலாந்து அணி முதலில் பேட்டிங் செய்தது.

தொடக்க வீரர்களாக கான்வே டிம் சீபராட் ஆகியோர் களமிறங்கினர். தொடக்கம் முதல் இருவரும் அதிரடியாக விளையாடினர். தொடக்க விக்கெட்டுக்கு 100 ரன்கள் சேர்த்த நிலையில், கான்வே 44 ரன்களில் வெளியேறினார்.பின்னர் ரச்சின் ரவீந்திரா 2 ரன்களுக்கு ஆட்டமிழந்தார். மறுபுறம் சிறப்பாக விளையாடி டிம் சீபாராட் அரைசதம் அடித்தார். அவர் 62 ரன்களில் வெளியேறினார். பின்னர் கிளென் பிலிப்ஸ், டேரில் மிட்சேல் பந்துகளை பவுண்டரி, சிக்சருக்கு பறக்க விட்டனர். இறுதியில் 20 ஓவர்கள் முடிவில் 7 விக்கெட் இழப்பிற்கு நியூசிலாந்து அணி 215 ரன்கள் குவித்தது.

தொடர்ந்து விளையாடிய இந்திய அணி, நியூசிலாந்து அணியின் பந்துவீச்சை சமாளிக்க முடியாமல் அடுத்தடுத்து விக்கெட்டுகளை இழந்தது. அபிஷேக் சர்மா டக் அவுட் ஆனார். சூர்யகுமார் யாதவ் 8 ரன்களும் , சஞ்சு சமசன் 24 ரன்களும் எடுத்து ஆட்டமிழந்தனர்.

ரிங்கு சிங் சிறப்பாக விளையாடி 39 ரன்கள் எடுத்தார். மறுபுறம் போராடிய ஷிவம் துபே அரைசதமடித்து 65 ரன்களில் வெளியேறினார். இறுதியில் 18.4 ஓவர்கள் முடிவில் 165 ரன்கள் மட்டுமே இந்திய அணி எடுத்தது. இதன்மூலம் 50 ரன்கள் வித்தியாசத்தில் இந்தியாவை வீழ்த்தி நியூசிலாந்து அணி வெற்றி பெற்றது.

# ஆஸ்திரேலிய ஓபன்: ரைபகினா அரையிறுதிக்கு முன்னேற்றம்



கிராண்ட்ஸ்லாம் போட்டிகளில் ஒன்றான ஆஸ்திரேலிய ஓபன் டென்னிஸ் போட்டி தொடர், ஒவ்வோர் ஆண்டின் தொடக்கத்தில் நடைபெறும். இதன்படி, இதன்படி, ஆஸ்திரேலியாவின் மெல்போர்ன் நகரில் கடந்த 18ந்தேதி இந்த டென்னிஸ் போட்டி தொடர் தொடங்கியது. தொடர்ந்து பிப்ரவரி 1ந்தேதி வரை போட்டிகள் நடைபெறும்.

இதில் பெண்களுக்கான ஒற்றையர் பிரிவின் காலிறுதி ஆட்டம் ஒன்றில் போலந்து வீராங்கனை இகா ஸ்வியாடெக், கஜகஸ்தான் வீராங்கனை ரைபகினா ஆகியோர் மோதினர். பரபரப்பான இந்த ஆட்டத்தில் 75,61 என்ற செட் கணக்கில் ரைபகினா வெற்றி பெற்று அரையிறுதிக்கு முன்னேறினார்.

# 4வது டி20 : இந்திய அணிக்கு 216 ரன்கள் இலக்கு நிர்ணயித்த நியூசிலாந்து

இந்தியாவுக்கு சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ள நியூசிலாந்து கிரிக்கெட் அணி 3 ஒருநாள் 5 டி20 போட்டிகள் கொண்ட தொடரில் விளையாடி வருகிறது. இதில் ஒருநாள் தொடரை 21 என்ற கணக்கில் நியூசிலாந்து அணி கைப்பற்றியது. இதையடுத்து, கடந்த 21ம் தேதி இரு அணிகளுக்கும் இடையே நடைபெற்ற 5 போட்டிகள் கொண்ட டி20 ஓவர் கிரிக்கெட் தொடரின் முதல் 3 ஆட்டங்களில் இந்திய அணி வெற்றி பெற்று தொடரையும் கைப்பற்றி விட்டது.இந்நிலையில் இந்தியாநியூசிலாந்து அணிகள் இடையிலான 4வது 20 ஓவர் கிரிக்கெட் போட்டி ஆந்திர மாநிலம் விசாகப்பட்டினத்தில் இன்று நடக்கிறது.இந்த போட்டிக்கான டாஸ் போடப்பட்டது.அதில் டாஸ் வென்ற இந்திய அணியின் கேப்டன் சூர்யகுமார் யாதவ் பந்துவீச்சை தேர்வு செய்தார். அதன்படி நியூசிலாந்து அணி முதலில் பேட்டிங் செய்தது. தொடக்க வீரர்களாக கான்வே , டிம் சீபராட் ஆகியோர் களமிறங்கினர். தொடக்கம் முதல் இருவரும் அதிரடியாக விளையாடினர். தொடக்க விக்கெட்டுக்கு 100 ரன்கள் சேர்த்த நிலையில், கான்வே 44 ரன்களில் வெளியேறினார்.பின்னர் ரச்சின் ரவீந்திரா 2 ரன்களுக்கு ஆட்டமிழந்தார். மறுபுறம் சிறப்பாக விளையாடி டிம் சீபாராட் அரைசதம் அடித்தார். அவர் 62 ரன்களில் வெளியேறினார். பின்னர் கிளென் பிலிப்ஸ், டேரில் மிட்சேல் பந்துகளை பவுண்டரி , சிக்சருக்கு பறக்க விட்டனர். இறுதியில் 20 ஓவர்கள் முடிவில் 7 விக்கெட் இழப்பிற்கு நியூசிலாந்து அணி 215 ரன்கள் குவித்தது.

Printed by KANIRAJA V. published by KANIRAJA V. on behalf of NAMADHU DHINA KANI TAMIL DAILY and printed at SEAMAN GRAPHICS No. 7/253, KVN puram 2 2nd street, KilpaukGarden, Chennai 600010. and published at No.28, Thalikattipalayam, Kaithamalai Road, Uttukuli, Tiruppur - 638751. Editor: KANI RAJA V. CELL: 9443699066